(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 9(8).]

# பாராளுமன்றம்

## 9ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 நவெம்பர் 23 சனிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2013 திசெம்பர் 02, திங்கட்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2012 ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதிய 1780/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 59 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2012 திசெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1788/41 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2012 யூலை மாதம் 27 ஆந் திகதிய 1768/36 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (இ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2012 செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 1774/36 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (இ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2012 ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய 1770/25 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

# 2013 திசெம்பர் 04, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

3656/ '13

கௌரவ வசந்த அலுவிஹாரே,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மஹிந்த சிந்தனையின் 47 ஆம் பக்கத்தில் குறிப்பாக அங்கவீனரான, வயோதிப சமுர்த்தி பெறுநர் ஒருவரைக் கொண்டுள்ள குடும்பத்திற்கு ரூபா 3000/- மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மஹிந்த சிந்தனை தொலைநோக்கின் 193 ஆம் பக்கத்தின்படி இவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி கூற்றுக்களின் பிரகாரம், உரித்தாகின்ற கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்காக அங்கவீன நிலையிலுள்ள சமுர்த்தி நிவாரணம் பெறுகின்றவரான குருநாகல், பமுனாகொட்டுவ, கடிஹாரயவில் வசிக்கும் டபிள்யு.எம்.பீ.ஏ. வீரசேகர 2012.05.14 ஆம் திகதி பலவீனர்களுக்கான தேசிய செயலகத்திற்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்துள்ளார் என்பதையும்;

(iv) மேற்படி விண்ணப்பம் தற்போது காத்திருப்போர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ரூபா 3000/- கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கு 2012.05.21 ஆம் திகதியிலிருந்து காத்திருப்போர் பட்டியலில் உள்ள திரு. வீரசேகரவுக்கு மேற்படி கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3695/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை வங்கியின் மூலம் 2013.03.06 ஆம் திகதியன்று ரிவிர பத்திரிகையில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி விளம்பரத்துக்கு இலங்கை வங்கியினால் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகை எந்த செலவுத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டதென்பதையும்;

(v) ஏதேனுமொரு அரசியல் கட்சியின், ஏதேனுமொரு பதவிக்கு எவரேனுமொரு நபர் நியமிக்கப்படும் போது அதற்கேற்புடையதாக இலங்கை வங்கியினால் விளம்பரங்களை பிரசுரிக்க முடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 திசெம்பர் 05, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

3655/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் 30 இற்கும் குறைவான மாணவர் தொகையைக் கொண்டுள்ள பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையிலும் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைகளை விருத்திசெய்து மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது அல்லது குறித்த பாடசாலைகளை அதே நிலையில் தொடர்ந்தும் பேணிவருவது பொருத்தமானதா என்பதைப் பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதனடிப்படையில் விருத்தி செய்யப்பட்ட பாடசாலைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளமையின் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் கடந்த 05 வருடத்தினுள் மூடப்பட்ட பாடசாலைகள் யாவை என்பதையும்;

(ii) குறித்த மாணவர்களுக்கு வேறு பாடசாலைகளை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மூடப்பட்டுள்ள மேற்படி பாடசாலைக் கட்டங்களின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(iv) மேற்படி கட்டடங்கள் வேறு தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், அத் தொழிற்பாடுகள் யாவை என்பதையும்;

(vi) இன்றேல், மேற்படி கட்டடங்களை பயன்படுத்தாது காடடர்வதற்கு விடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3694/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச மரக் கூட்டுத்தாபனத்தின் மூலம் 2013.03.06 ஆம் திகதியன்று ரிவிர பத்திரிகையில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி விளம்பரத்துக்கு அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகை எந்த செலவுத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டதென்பதையும்;

(v) ஏதேனுமொரு அரசியல் கட்சியின், ஏதேனுமொரு பதவிக்கு எவரேனுமொரு நபர் நியமிக்கப்படும் போது அதற்கேற்புடையதாக அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் விளம்பரங்களை பிரசுரிக்க முடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 திசெம்பர் 06, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2681/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கொழும்பு கொமர்சல் கம்பனி (CCC) லிமிட்டட் தொடர்பாக,

(i) மகிந்த சிந்தனை கொள்கைகளுக்கு எதிராக முகாமைத்துவத்தை தனியர் மயப்படுத்துவதற்கு அல்லது தனியார்த் துறைக்கு மாற்றுவதற்கான காரணம் யாவை என்பதையும்;

(ii) புதிய உரிமையாளர்கள் அல்லது முகாமைத்துவப் பங்காளர்களையும், ஒப்பந்தத்தையும்;

(iii) முகாமைத்துவக் கணக்குகள் எப்போது சமர்ப்பிக்கப்பட்டன என்பதையும்;

(iv) இன்றேல், எப்பொது சமர்ப்பிக்கப்படும் என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) "CCC" லிமிட்டட்டின் காணிகளை வெளிநாட்டவருக்கு விற்பதன் காரணங்களையும்;

(ii) காணிகளின் விற்பனை விலையையும்;

(iii) மேற்படி கொடுக்கல் வாங்கல்களில் 100% வரி செலுத்தப்பட்டதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், செலுத்திய திகதியையும்;

(v) இன்றேல், செலுத்தாமைக்கான காரணங்களையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) மேற்படி காணி கொடுக்கல் வாங்கல்களில் கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், கேள்விப் பத்திர மதியுரை அல்லது தெரிவுக் குழுவின் உறுப்பினர்களையும்;

(iii) இன்றேல், அது மேற்கொள்ள அடிப்படை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3362/ '12

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுகாதார அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2013 திசெம்பர் 07, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2510/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 மார்ச்சு மாதம் ஜெனீவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் கலந்துகொண்ட இலங்கை தூதுக் குழுவில் உள்ளடங்கியவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கூட்டத்தொடரில் கலந்துகொண்டவர்களின் பெயர் மற்றும் பதவிகள் யாவை;

(iii) மேற்படி தூதுக் குழுவுக்கு செலவான மொத்தப் பணத் தொகை யாது;

(iv) மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையை தோற்கடிப்பதற்கு பின்பற்றப்பட்ட செயன்முறைகளும் உபாயங்களும் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3352/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கல்வி அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2013 திசெம்பர் 09, திங்கட்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2448/ '12

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் நடைமுறையிலிருக்கும் நில்வளா திட்டத்தின் கீழ் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள பம்பி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு பம்பி நிலையமும் அமைந்துள்ள இடங்கள் எவை என்பதையும்;

(iii) அந்த பம்பி நிலையங்களில் தற்போது செயிலிழந்துள்ளவற்றின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள பம்பி நிலையங்கள் செயலிழந்துள்ளதனால் நில்வளா திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைய முடியாதுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அந்தப் பம்பி நிலையங்களை உடனடியாக புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறெனின் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2465/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கடந்த ஐந்து வருடங்களில்,

(i) இலங்கை கிரிக்கெட் சபைக்குச் சொந்தமான கிரிக்கெட் மைதானங்களால் ஏற்பட்ட மொத்தச் செலவினங்களை ஆண்டு அடிப்படையில் யாதென்பதையும்;

(ii) மேற்படி செலவினத்தின் ஒதுக்கீடுகளின் மூலதனம் மற்றும் வட்டி உட்கூறுகள் யாவை என்பதையும்;

(iii) (அ) (i) குறிப்பிடப்பட்ட கிரிக்கெட் மைதானங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானங்களை ஆண்டு அடிப்படையில் யாதென்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 திசெம்பர் 10, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2509/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட மாகாணத்தின் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் பேணப்பட்டு வருகின்ற முன்பள்ளிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி முன்பள்ளிகள் பேணிவரப்படுகின்ற கிராமங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி முன்பள்ளிகளில் பல பௌதீக வளப் பற்றாக்குறைகள் காணப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3697/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையின் மூலம் 2013.03.06 ஆம் திகதியன்று ரிவிர பத்திரிகையில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி விளம்பரத்துக்கு தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையினால் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகை எந்த செலவுத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டதென்பதையும்;

(v) ஏதேனுமொரு அரசியல் கட்சியின், ஏதேனுமொரு பதவிக்கு எவரேனுமொரு நபர் நியமிக்கப்படும் போது அதற்கேற்புடையதாக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையினால் விளம்பரங்களை பிரசுரிக்க முடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 திசெம்பர் 11, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

3264/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கெட்பதற்கு,— (2)

(அ) (i) கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக 2012 ஓகத்து மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி நிலையங்களால் விநியோகிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை

எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டில் கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்காக விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை, அதற்குத் தோற்றியவர்களின் எண்ணிக்கை, சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கொரிய அரசின் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றோரின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2011 ஆம் ஆண்டு கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டுக் கடவுச் சீட்டு கட்டாயமாக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3696/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வரையறுக்கப்பட்ட விமானநிலைய, விமானசேவைகள் (ஸ்ரீ லங்கா) கம்பனியின் மூலம் 2013.03.06 ஆம் திகதியன்று ரிவிர பத்திரிகையில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி விளம்பரத்துக்கு இக் கம்பனியினால் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகை எந்த செலவுத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டதென்பதையும்;

(v) ஏதேனுமொரு அரசியல் கட்சியின், ஏதேனுமொரு பதவிக்கு எவரேனுமொரு நபர் நியமிக்கப்படும் போது அதற்கேற்புடையதாக வரையறுக்கப்பட்ட விமானநிலைய, விமானசேவைகள் (ஸ்ரீலங்கா) கம்பனியினால் விளம்பரங்களை பிரசுரிக்க முடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2013 திசெம்பர் 12, வியாழக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1895/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டிய கல்வி வலயத்திற்குரியதாயிருந்த யாய காமினீ கனிஷ்ட வித்தியாலயம் மூடப்பட்டு பல வருடங்கள் ஆகின்றனவென்பதையும்;

(ii) இந்த வித்தியாலயத்திற்குச் சொந்தமாகவிருந்த சில கட்டிடங்கள் தற்போது அழிவுற்று வருகின்றனவென்பதையும்;

(iii) இந்த வித்தியாலயத்திற்குச் சொந்தமாக சுமார் ஏழு ஏக்கர் நிலப்பரப்பு உள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) யாய காமினீ கனிஷ்ட வித்தியாலயத்திற்குச் சொந்தமாகவுள்ள கட்டிடங்கள் மற்றும் நிலப்பரப்பு என்பவற்றை அழிவுற இடமளிப்பது பெரும் தவறாகும் என்பதையும்;

(ii) மேற்படி வித்தியாலயத்திற்குச் சொந்தமான வளங்களைப் பயன்படுத்தி கைத்தொழிற்சாலையொன்றை ஆரம்பித்து பிரதேசவாழ் மக்களின் தொழில் பிரச்சினைக்கு தீர்வு வழங்க முடியுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) ஆமெனில், மேற்படி பாடசாலையின் வளங்களை மேலே முன்மொழியப்பட்டவாறு பயன்படுத்துவதற்கு திட்டமிடுவாரா என்பதையும்;

(ii) இன்றேல், பயனுள்ள வேறு நடவடிக்கைக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நடவடிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2714/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இன்றுள்ளவாறு நாட்டிலுள்ள தேசிய வைத்தியசாலைகள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளின் எண்ணிக்கையை அவர் தனித்தனியாக கூறுவாரா?

(ஆ) மேற்கூறப்பட்ட வைத்தியசாலைகள் தொடர்பில்,

(i) மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(ii) படுக்கைகளுக்கும் வைத்தியர்களுக்கும் இடையிலான விகிதம் யாதென்பதையும்;

(iii) படுக்கைகளுக்கும் தாதியர்களுக்கும் இடையிலான விகிதம் யாதென்பதையும்;

(iv) வைத்தியர்களுக்கும் தாதியர்களுக்கும் நோயாளிகளுக்கும் இடையிலான விகிதம் யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2013 திசெம்பர் 13, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2559/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005, தொடக்கம் 2010 வரையான ஒவ்வொரு வருடத்திலும் கல்விக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை அந்த வருடத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெவ்வேறாக எத்தனை சதவீதம் என்பதையும்;

(ii) கல்வித்துறையின் அபிவிருத்திக்காக மேற்கூறியவாறு ஒதுக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதங்கள் இதற்குப் போதுமானதாயுள்ளதா என்பதையும்;

(iii) கல்வித்துறையில் நிலவும் தற்போதைய நிலைமையின்படி அதன் முன்னேற்றத்துக்காக இதை விட கூடுதலான பணத்தொகை ஒதுக்கப்பட வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3363/ '12

கௌரவ பி. ஹரிசன்,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2013 திசெம்பர் 14, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2511/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் சுத்தமான குழாய் குடிநீர் வழங்கப்படும் கிராமங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் சுத்தமான குழாய் குடிநீர் வழங்கப்படாத கிராமங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கிராமங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில் அது எக்கால கட்டத்தினுள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2684/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சியின் எண்ணக்கருவை அவர் விளக்குவாரா?,

(ஆ) (i) இற்றை வரை ஒவ்வொரு தேசத்திற்கு மகுடம் கண்காட்சியிலும் ஏற்படுத்தப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட தொழில்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இத்தொழில்கள் நிரந்தரமானவையும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவுமா என்பதையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) (i) அனுராதபுர தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு உண்மையிலேயே எச்செலவுத் தலைப்பிலிருந்து பணம் செலவிடப்பட்டது என்பதையும்;

(ii) கடந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்குத் தேவைப்பட்ட ஊழியம் மற்றும் சொத்துக்கள் போன்றவை எந்தவிதக் கொடுப்பனவுமின்றிப் பாவிக்கப்பட்டதா என்பதையும்; உதாரணமாக, ஆயுதப் படை ஆளணியினர் மற்றும் தொழிலாளர்கள் போன்றோரும், இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் போன்றவையும் செலவு ஆக்கக் கூறுகளாக மொத்த செலவுக் கணிப்பீட்டின் போது உள்ளடக்கப்பட்டிருந்தனவா என்பதையும்;

(iii) இன்றேல், குறிப்பிட்ட கண்காட்சிக்கான செலவு எவ்வாறு கணிப்பிடப்பட்டது என்பதையும்;

(iv) எதிர்வரும் மூன்று தேசத்திற்கு மகுடம் கண்காட்சிகளுக்கும் ஏற்படுமென எதிர்பார்க்கின்ற செலவினைத் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2013 திசெம்பர் 17, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2457/ '12

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) இற்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன்னர் அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட மாத்தறை மாவட்டத்தின் அத்துரலிய பிரதேச சபை அலுவலக கட்டிடத்தின் நிர்மாணப்பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இதற்காக நிதி ஏற்பாடுகளை வழங்கிய நிறுவனம் யாதென்பதையும்;

(iii) நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருப்பின், நிர்மாணப் பணிகளை நிறுத்தியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அதன் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுமாயின் எத்திகதியில் என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3261/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு வெளி சுற்றுவட்ட அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான அண்ணளவான மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் நிலத்தின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) சுவீகரிக்கப்பட்ட மேற்படி காணிகள் உரித்தாகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் அப் பிரதேச செயலாளர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளின் பெறுமதி அண்ணளவாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2013 திசெம்பர் 18, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2569/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பாதுகாக்கப்பட்ட பிரதேசமென பிரகடனப்படுத்தப்பட்ட புலத்சிங்கல வகுரான வனம் அழிவுற்று வருகின்றது என்பதையும்;

(ii) மிகவும் அரிதான தாவர, விலங்கு வளங்கள் மிக்க இந்த வனத்தை பாதுகாப்பதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவில்லை என்பதையும்;

(iii) இவ்வனத்தைக் கண்டுகளிப்பதற்காக வருகை தருவோருக்கு தகவல்கள் வழங்குவதற்கானதொரு செயற்திட்டம் இல்லை என்பதையும்;

(iv) படபொத்த கால்வாயினூடாக வகுரான வனத்திற்கு கழிவுகள் வந்தடைவதை நிறுத்துவதற்கானதொரு செயற்திட்டம் ஏற்படுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட கூருணர்வுடனான சுற்றாடல் வலயத்திற்கு பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்களின் சேவையைத் துரிதமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2718/ ’12

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக் கிரிக்கெட்டின் 2009 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரையில் உள்ளவாறான பண ஒதுக்கங்களையும்;

(ii) ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்தின் போதும் நிர்ணயிக்கப்பட்ட வருமானத்தினை இலங்கை கிரிக்கெட்டினால் அடைய முடியாமல் போயுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அச்சூழ்நிலைக்கான காரணத்தினையும்

அவர் கூறுவாரா?

(ஆ) கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்புச் செய்வதற்கான உரிமையை 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது விற்பனை செய்ததால் இலங்கை கிரிக்கெட்டிற்குக் கிடைத்த வருமானத்தினையும் அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2013 திசெம்பர் 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2449/ '12

கௌரவ புத்திக பத்திரண,—உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) அக்குரஸ்ஸ மற்றும் அத்துரலிய பிரதேச சபைகளினால் சேகரிக்கப்படும் குப்பை கூழங்கள் கொடபிட்டிய, பானதுகம, கனஹலாகம, கவுஸ்வத்த, மற்றும் கொலுவத்த ஹேன ஆகிய கிராமங்களின் மத்தியில் உள்ள ரசீனாவத்த என்ற இடத்தில் குவிக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) அந்த இடத்தில் குப்பை கூழங்கள் குவிக்கப்படுவதனால் பிரதேச மக்கள் கடுமையான சுகாதார அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ரசீனாவத்த என்ற இடத்தில் குப்பை கூழங்கள் குவிக்கப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் ;

(ii) தற்போது குப்பை கூழங்களைப் போடுவதற்கு மாற்றிடம் ஒன்று தெரிவு செய்யப்படுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறெனின் அந்த இடம் எது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2565/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,—உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) சுற்றுலா நகரமான அளுத்கம நகரில் விரிவாக்கப்பட்ட வீதி முறைமைக்கு ஏற்றவாறு முறைசார்ந்த விதத்தில் அமைக்கப்படாதுள்ள வடிகால் தொகுதியில் கழிவுகள் தேங்கி இடையூறாக இருப்பதே நகரில் துர்நாற்றம் வீசுவதற்கு காரணமாக அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி நிலைமையை சீராக்குவதற்கு எப்போது நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) அளுத்கம நகரில் நிர்மாணிக்கப்பட்ட புதிய பேரூந்து தரிப்பிடத்தின் கடைகள் இதுவரை வர்த்தகர்களுக்கு வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2013 திசெம்பர் 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2562/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள பல்வேறான உள்ளூராட்சி நிறுவனங்களிலும் பணியாற்றுகின்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு மாதாந்தம் கிடைக்கும் சம்பளம் யாதென்பதையும்;

(ii) மேற்படி மக்கள் பிரதிநிதிகளுக்கு போதியளவு சம்பளம் கிடைக்கின்றதா என்பதையும்;

(iii) உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு மக்கள் சேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வழங்கப்படும் வசதிகளும் கொடுப்பனவுகளும் யாவை என்பதையும்;

(iv) போற்றத்தக்க விதத்தில் மக்கள் சேவையினை வழங்குவதற்கு குறித்த வசதிகளும் கொடுப்பனவுகளும் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2716/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கத்தினால் 2012 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையையும்;

(ii) அவ்வீடுகளை நிர்மாணித்த நிறுவனங்களையும்;

(iii) செலவுசெய்யப்பட்ட பணத்துக்கான மூலங்களையும்;

(iv) உரிமையாளரினால் அவர்கள் பெற்ற வீட்டுக்காக செலுத்த வேண்டிய தொகையையும்;

(v) அத்தகைய வீடுகள் ஒதுக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலையும்;

(vi) மேற்கூறிய ஒரு வீட்டின் நிர்மாணத்துக்காக செலுத்தப்பட்ட செலவினத்தையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?